## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 123/2016 மற்றும் 150/2016** **நாள். 05.09.2022**

2022ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 05ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரட்சகன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | லூர்துசாமி | சாதி | |
| கிராமம் | கவரை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 42 |

**ம..சா.1**

### குறுக்கு விசாரணை

விபத்தில் காயம் ஏற்பட்டதாக நஷ்ட்ஈடு கோரி மனுதாக்கல் செய்துள்ளேன். என்னுடைய ஆதார் கார்டு அடிப்படையில் நான் 21.04.1976 பிறந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதன் அடிப்படையில் விபத்து தேதியில் எனக்கு வயது 40 என்றால் சரியல்ல. விபத்து பதிவேடு ம.சா.ஆ.5 ல் என் வயது 40 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 20.03.2016 ம் தேதி இரவு 8.00 மணிக்கு விபத்து நடந்தது. கோழிப்பண்ணையில் இருந்து கொலப்பாக்கத்திற்கு டிவிஎஸ் 50 வாகனத்தில் என் மகள் தெரசா உடன் சென்றேன். நான் ஓட்டிசென்ற வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. நான் ஓட்டிசென்ற வாகனத்தில் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது. நான் ஓட்டிசென்ற வாகனத்தை விபத்திற்கு 5,6 வருடங்களுக்கு முன்பு நான் பணம் கொடுத்து வாங்கினேன். நான் ஓட்டிசென்ற வாகனத்தை கொம் மேடு கிராமத்தை சேர்ந்தவரிடம் இருந்து வாங்கினேன். அவர் பெயர் ஞாபகம் இல்லை. நான் வாகனத்தை வாங்கிய பிறகு வாகனத்தை என் பெயரில் பதிவு மாற்றம் செய்யவில்லை. நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு செய்யவில்லை. எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. என்னுடைய வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு போலிசார் எடுத்து சென்றார்கள். என் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவு எண்.9046 ஆகும். மேற்படி வாகனம் இருசக்கர வாகனம் ஆகும். அது ஸ்பிளிண்டர் வாகனம் ஆகும். கொலப்பாக்கத்தில் இருந்து எதிரே வந்தவர் என் மீது மோதிவிட்டார். விபத்து நடந்த சாலை பஸ் போகும் அளவிற்கு அகலமானதாகும். கோழிப்பண்ணையில் இருந்து கொலப்பாக்கத்திற்கு செல்லும் சாலையில் நான் வலதுபக்கம் சென்று எதிரே வந்த வாகனத்தின் மீது மோதிவிட்டேன் என்றால் சரியல்ல.

நான் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை கவனக்குறைவாகவும் அஜாக்கிரதையாக ஓட்டி விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. என்மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநர் பெயர் எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக என் மைத்துனர் மரியான் என்பவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். விபத்து ஏற்பட்டு 3 நாட்கள் கழித்து புகார் கொடுத்தார். என் மைத்துனர் அவராகவே புகார் கொடுத்தார். விபத்து சம்பந்தமாக மருத்துவமனையில் வந்து போலிசார் என்னை விசாரித்தார்கள். இவ்வழக்கு விபத்து சம்பந்தமாக இறுதியறிக்கை தாக்கல் செய்யபட்டா என்றால் எனக்கு தெரியாது. இறுதியறிக்கையின் இவ்வழக்கு தாக்கல் செய்யவில்லை. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. முதல் தகவல் அறிக்கையிலும் நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும் விபத்து ஏற்படுத்தி வாகனத்தின் ஓட்டுநர் பெயரை குறிப்பிடவில்லை. தோராயமாக கிருஷ்ணமூர்த்தி என்பவர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் ஓட்டுநர் என்று கூறி அவரின் ஓட்டுநர் உரிமத்தை ம.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு வலது காலில் உள்ள 4 விரல்களில் எலும்பு முறிவு ஏற்பட்டது. காயம் பட்டஉடன் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைகாக சேர்ந்தேன். பின்னர் வெங்கடேஷ்வரா மருத்துவமனையில் சிகிச்சை எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. சென்னை ஸ்டேன்லி மருத்துவமனையில் 20 நாட்கள் சிகிச்சை பெற்றேன். விபத்திற்கு முன்பு நான் டெய்லராக வேலை செய்து வந்தேன். நிரூபணமாக வாக்குமூலம் பேரா 11 ல் அதிக நஷ்ட்ஈடு பெறுவதற்காக பொய்யான விபரங்கள் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணம் நான் தான் என்றாலும் 1 வது எதிர் மனுதாரரின் வாகன ஓட்டுநரால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 1 வது எதிர் மனுதாரர் வானக ஓட்டுநர் யார் என்பது குறித்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. யார் ஓட்டிய வாகனத்திற்கு காப்பீடு பதிவு ஆவணம் மற்றும் எனக்கு ஓட்டுநர் உரிமம் ஆகியவை இல்லாமல் நான் வாகனத்தை ஓட்டியதால் இரண்டாம் எதிர் மனுதாரர் நஷ்டஈட வழக்கு வேண்டியதில்லை என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எவ்வித ஆவணங்களும் இல்லாமலும் நான் இருசக்கர வாகனத்தில் என் மகள் தெரசாவை அழைத்து சென்றது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. என் மகளுக்கு வலது காலில் எலும்புமுறிவு ஏற்பட்டது. என் மகள் தற்போது 12 ம் வகுப்பு படித்து வருகிறார். என் மகளையும நான் சிகிச்சை பெற்ற மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் 2 வது எதிரி மனுதாரர் நஷ்டஈடு வழங்கவேண்டியதில்லை என்றாலும் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.